

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து : ஆப்பிரிக்காவில் உள்ள கிறிஸ்தவர்கள்: ஆப்பிரிக்காவில் உள்ள கிறிஸ்தவர்கள், இரக்கமுள்ள இயேசுவைப்போல் ஒப்புரவு, நீதி மற்றும் சமாதானத்தின் இறைவாக்களிக்கும் சாட்சிகளாக திகழ வேண்டுமென்று**

மே மாத கரு : **மரியா அனைத்து நாடுகளின் விண்மீன்**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஏப் 30 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | உயிர்ப்பின் 3ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | உயிர்ப்பின் 3ஆம் ஞாயிறு |
| | மாலை 6.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் சிற்றாலயம் - கொடியேற்றம் |
| மே 1 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | தொழிலாளரான புனித யோசேப்பு |
| | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் 2 |
| மே 2 செவ் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித அத்தனாசியுஸ் |
| | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் 3 |
| மே 3 புதன் | மாலை 7.00 | புகழாராதனை/ குணமளிப்பு திருப்பலி (த) | புனித செபஸ்தியார் 4 |
| மே 4 வியா | காலை 6.30 | திருப்பலி (ஆ) | உயிர்ப்பின் வாரநாள் |
| | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் 5 |
| மே 5 வெள் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | உயிர்ப்பின் வாரநாள் |
| | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் 6 |
| மே 6 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | உயிர்ப்பின் வாரநாள் |
| | மாலை 6.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் 7 - பவனி |
| மே 7 ஞா | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | உயிர்ப்பின் 4ஆம் ஞாயிறு |
| | காலை 10.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் சிற்றாலய திருவிழா, |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| ஏப் 30 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| மே 2 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை செபம் |
| மே 4 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| மே 5 வெள் | மாலை 7.30 | ஆலயம் | பாடல்குழு (ஆ) |
| மே 6 சனி | காலை 10.00 | பெர். மை 2-5 | சீடத்துவ நிகழ்வு |
| **7 மே 2017 மறைக்கல்வி வகுப்புகள் நடைப்பெறாது. மீண்டும் 14 மே 2017 வழக்கம்போல் வகுப்புகள் நடைப்பெறும்.** | | | |

மே மாத திருமணம் 2017

மே 27 மாலை 4.30 திருமணம் (த) எட்மண் பாஸ் த/பெ அருளப்பன் & கேப்ரினா இன்ப கீதா த/பெ சுப்ரமணியம்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

1. **பினாங்கு மறைமாவட்ட தவக்கால பிரச்சார உறைகள்:** தயவு செய்து தவக்கால பிரச்சார உறைகளை 30 ஏப் 2017க்குள் பங்கு அலுவலகத்தில் ஒப்படைக்கவும். அவைகள் பினாங்கு மறைமாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
2. **இளைஞர்கள் பணிகள்:** பங்கு இளைஞர்கள் இந்தோனேசியாவில் நடைபெற உள்ள ஆசியா இளைஞர் தினத்திற்கு திருப்பயணம் செல்வதற்கு நிதி திரட்ட 28 மே 2017 (ஞாயிறு) மதிய உணவை விற்க ஏற்பாடு செய்யப்படும். டிக்கெட்டுகள் 30 ஏப்ரல் 2017 (ஞாயிறு) திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யவுள்ளனர். தயவு செய்து உங்களது முழு ஆதரவை தாருங்கள்.
3. **மலேசியன் கத்தோலிக்க முகாம் மாணவர்கள் தினம் 2: நாள்**: 23~27 ஜூன் 2017 (வெள்~செவ்) **இடம்**: பினாங்கு தீவு

**தொடர்புக்கு**: பினாங்கு மறைமாவட்ட இளைஞர் கட்டமைப்பு (04-2274851)/ மின்னஞ்சல்: pdyn@pgdiocese.org

**4. அன்னையர் தின கலை நிகழ்ச்சி:** 14 மே 2017 (ஞாயிறு) நமது பங்கு மண்டபத்தில் அன்னையர் தின கலை நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கிறது. மாலை 6.00க்கு (நூடல்ஸ்+coffee) நட்புறவுடன் தொடங்கும் இந்நிகழ்ச்சியில் நடனம், பாடல், சொற்போர், "நம்மிடமுள்ள மூட நம்பிக்கைகள்- வாதாட்டம்" இவைகளோடு "கானாவூர் கல்யாணம்" குறுநாடகத்துடன் பாத்திமாவில் மாதா கொடுத்த காட்சிஞம் நடைபெறும். தாய்மார்கள் அனைவரோடும் எல்லோரும் வந்து நிகழ்ச்சியை பார்த்து மகிழ நமது ஆலய கலாச்சாரக்குழு அழைக்கிறது.

**5. நோயாளர் ஆசீர்வாதம்:** அதிச தலைவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் கவனத்திற்கு. தயவு செய்து இதை முக்கியமானதாக எடுத்துக்கொள்ளுங்கள். உங்களது அதிச மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆசீர்வாதம் தேவைப்பட்டால் உடனடியாக பங்கு குருவானவர்களிடம் தெரிவியுங்கள். கடைசி நிமிடம் வரை காத்திருக்க வேண்டாம்.

**6. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (ஆங்கிலம்):** 20 மே 2017 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**7. புனித செபஸ்தியார் சிற்றாலய திருவிழா**:

- புனித செபஸ்தியார் சிற்றாலய திருவிழாவின்போது மெழுகுவர்த்தி பெட்டிகளாக நன்கொடையாக செலுத்தலாம். விற்ற பணம் சிற்றாலய பராமரிப்பிற்காக பயன்படுத்தப்படும். தொடர்புக்கு: செபஸ்தியன் (010-3213236) /அந்தோணி (019-5600393)
- திருவிழாவின்போது கடைசி நாள் **உணவிற்காக ரொக்கமாக நன்கொடைகளை** கொடுக்க விருப்பமுள்ளவர்கள் தொடர்புக்கு: ரோபர்ட் ஜோன் (012-5085449)
- **நவநாள் திருப்பலிகளின்போது உணவுகளை கொடுக்க** விருப்பமுள்ளவர்கள் தொடர்புக்கு: அந்தோணி (019-5600393)
- தனிப்பட்ட முறையில் மற்றும் அதிச அளவில் புனித செபஸ்தியார் சிற்றாலய திருவிழாவிற்காக வசூலிக்கப்படாது. **திருவிழாவிற்காக பொதுவாக நன்கொடைகளை செலுத்த** விருப்பமுள்ளவர்கள் பங்கு அலுவலகத்தில் செலுத்தலாம்.

**8. அடக்க ஏற்பாடு:** அடுத்த 5 வருடங்களுக்கு தம்பூனில் உள்ள கத்தோலிக்க கல்லறையை புனித சகாய மாதா தேவாலயம் நிர்வாகம் செய்யும். நமது பங்கில் ஏதேனும் மரணம் ஏற்பட்டால் உடனடியாக திருப்பலிக்கான ஏற்பாட்டிற்கு புலூமா பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். அதன் பிறகு அடக்கத்திற்கான ஏற்பாட்டிற்கு நீங்கள் உடனடியாக புனித சகாய மாதா தேவாலயத்தை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். மற்ற நேரங்களில் தோமஸ் ஜீ (012-5182818) தொடர்பு கொள்ளவும்.

**9. தம்பூன் கல்லறையில் அடக்கம் செய்ய இடங்கள்:** தம்பூன் கல்லறையில் தற்போது சுமார் 1,000 இடங்களே உள்ளன. இவை சுமார் 10 ஆண்டுகளுக்கு போதுமானவை. நாம் வேறு இடங்களை தேடும் வேளையில், நாம் நமது பங்கு மக்களை தங்களின் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டிமார்களின் கல்லறைகளில் சாம்பல் துவாரங்களை இட ஊக்குவிக்கிறோம். இவ்வாறு செய்வதனால் 10 ஆண்டுகளுக்கு மட்டுமே போதுமான கல்லறை இடங்களின் காலத்தை நாம் மேலும் நீட்டிக்க முடியும். ஒவ்வொரு கல்லறையிலும் நீங்கள் 6 துவாரங்கள் இட முடியும். தயவு செய்து சிந்தியுங்கள்!

**10. 13 மே 2017, பாத்திமா அன்னையின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்திற்கு உணவு:** கடந்த மாத பங்கு தலைவர்கள் உருவாக்கத்தின்போது அறிவிக்கப்பட்டபடி, அன்னை மரியா பாத்திமாவில் காட்சியளித்த நூற்றாண்டு நிறைவு கொண்டாட்டத்தின்போது சொந்த உணவைக் கொண்டு வரவேண்டும். நீங்கள் உங்கள் அதிச தலைவர்களை தொடர்பு கொண்டு 13 மே 2017ல் (சனி) ஏதேனும் உணவு கொண்டு வாருங்கள். நாம் நம்மிடம் உள்ளதை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொள்ளும்போது நாம் ஒரு "குடும்ப கொண்டாட்டத்தில்" பங்கு கொள்கிறோம்.

**11. சிற்றாலய கட்டுமான திட்டங்கள்:** ஒவ்வொரு சிற்றாலயம் கட்டுவதற்கு (கிஅ/ அவே) உச்ச வரம்பாக ரிம 1.2 மில்லியன் என ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. அந்த திட்டம் அதனை விட மலிவாகவும் இருக்கக் கூடும். எவ்வாறாயினும், எந்த திட்டமும் 80% பணம் வங்கியில் இல்லாமல் தொடங்கப்பட முடியாது. இந்த வகையில் நமது ஒவ்வொரு சிற்றாலயம் கட்டும் பணியை தொடங்க நம்மிடம் குறைந்தது ரிம 960,000.00 இருக்க வேண்டும். இது பினாங்கு மறைமாவட்ட கொள்கை. "நீங்கள் திட்டத்தை தொடங்குங்கள், நாங்கள் பிறகு தருகிறோம்" என்ற பேச்சு தேவையில்லை. நம்மிடம் பணம் இருந்தால் நாம் கட்டுவோம், இல்லையேல் நம்மிடம் பணம் வந்து சேரும் வரை காத்திருப்போம்!!!

**12. அதிச மறுசீரமைப்பு:** பினாங்கு மறைமாவட்ட அதிச அமைப்பு மற்றும் கொள்கைப்படி அதிசக்கள் மறுசீரமைப்பு செய்யப்படும். ஒவ்வொரு அதிசவிலும் 15க்கும் குறைவான குடும்பங்களே இருக்க ஊக்குவிக்கப்படுகின்றன. எனவே, 15 குடும்பங்களுக்கும் மேலுள்ள அதிசக்கள் பிரிக்கப்பட்டு, புதிய தனி அதிசக்கள் உருவாக்கப்படும். எப்படி இருப்பினும் முடிவு பங்கின் குருவானவர்களின் விவேகத்திற்கு விடப்படும்.

**13. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி மார்ச் 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **316,102.03** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **335,147.76** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும், வாரந்தோறும் அல்ல)

**23/04/17 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,204.50 **காலை 9.00** - RM 1,509.70 **காலை 11.00** - RM 91.00

**புந்தோங் தீகா** - RM 177.10 **மொத்தம்**– RM 2,982.30 **2017** - RM 390.00 **கல்லறை**– RM 1,294.35

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்